யிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான துறையின் மூலம் கடலூரில் சிப்காட் தொழிற்பேட்டை உட்ஸ்டாஸ் பயோ-டெக் பேக்டரி என்ற நிறுவனத்துடன் சிப்காட் இணைந்து குளுகோஸ் உற்பத்தியை விரைவில் தொடங்க இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரவள்ளிக் கிழங்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு 7 லட்சம் டன்கள் உற்பத்தி ஆகிறது. அது ஜவுளித் தொழிலுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதால் அந்த ஜவ்வரிசி போன்ற முக்கியமான பொருள்கள் தயாரிக்கப்படுவதற்கு போதுமான அளவுக்கு கிழங்கு இல்லை. எனவே ராசிபுரம் தொகுதியில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்குப் பரிசீலிக்க இயலவில்லை.

15----

நெல்லிக்குப்பம் தொகுதி கிராமங்களில் தென்பெண்ணை பெருவெள்ளத்தால் விளைநிலங்கள் பாதிப்பு.

*9696— திரு. சி. தாமோதரன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டி வட்டம், புலவனூர்—தட்டாம்பாளையம், மேல் குமாரமங்கலம், பகண்டை ஆகிய கிராமங்களில் கடந்த 17—11—1991 அன்று தென்பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் விவசாய விளைநிலங்கள் மணல் மேடிட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிவர்த்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் புலவனூர் பகுதியில் 17—11—1991 அன்றுப தென்பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் 40 ஹெக்டேர் நிலம் மணல் மேடிட்டு இருப்பதை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), தென்பெண்ணை ஆற்றில் பெருகிவந்த வெள்ளத்தினால் மணல் மேடிட்ட நிலங்களை சமன் செய்ய ரூ. 150 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசிற்கு செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். அவரது செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.